**தமன பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 101,850 ஆக இருந்த போதிலும், ஐந்தொகையில் அது ரூபா 100,450 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவையாக இருந்த வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 1,400 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலுவை முத்திரைக் கட்டணக் கணக்கின் ஆரம்ப மீதி சரியாகக் கொண்டுவரப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 196,850 தொகை ஐந்தொகையில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வருமானங்களுக்கு வைப்பாக வருமானப் பேரேட்டில் காண்பிக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புக்களின் பெறுமதி ரூபா 139,978 ஆக இருந்த போதிலும், அது ஐந்தொகையில் ரூபா 130,024 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஈ) வருமானப் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை வருமானம் ரூபா 414,362 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 381,219 ஆக ரூபா 33,143 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பவற்றுக்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் ரூபா 16,934 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 198,029 ஆக ரூபா 181,095 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி வருமானம் ரூபா 869,760 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 702,610 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் ஏக்கர் வரி வருமானம் ரூபா 167,150 தொகை குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் போக்குவரத்து, தொடர்புபடுத்துதல் தேவை மற்றும் ஏனைய சேவைகளுக்கான அட்டுறு செலவினம் ரூபா 26,756 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்தப் பெறுமதியை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---:|---|
| ஜறாவாசக் கட்டிடத் திருத்தம் | 62,467 | திருத்தச் செலவின விபரம் |
| நிலுவை ஏக்கர் வரி | 702,610 | நிலுவை ஏக்கர் வரி பதிவேடு |

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 வரையில் உள்ளூராட்சி சேவையின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் ரூபா 111,721 ஆக இருந்த போதிலும் இந்தத் தொகையைச் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| பிரதேச சபை விதிக் கோவை | | |
| (i) | விதி 33 | ஆதனவரி செலுத்தாது புறக்கணிக்கின்ற நபர்கள் தொடர்பான பட்டியலொன்று ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போதும் ஆதனவரி எழுது வினைஞரினால் தயாரிக்கப்பட்டு தலைவரின் கையொப்பத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 59 – 66 | ஒவ்வொரு வருட ஆரம்பத்தின் போதும் வருமானப் பரிசோதகர் அல்லது தலைவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் பிரதேசத்தில் பரிசோதனையொன்று மேற்கொண்டு கைதொழில் வரி அறவிட வேண்டிய நிறுனங்கள் இனங்காணப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | விதி 153 | வருமான நிலுவைத் தொகை தொடர்பான கூற்றொன்று பீ.எஸ்.07 படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 201,337 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 188,145 ஆக இருந்தது. ஆதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 13,192 அதிகரிப்பைக் காண்பித்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 1,295,200 பதிவாளர் நாயகத்திடமிருந்தும், நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 249,483 கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் கிடைக்கவேண்டியிருந்ததுடன் அந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஏப்ரல் 20 ஆந் திகதிய சபை வளவில் கழிவுகளை வகைப்படுத்துவதற்காக ரூபா 3,811,016 செலவில் அமைக்கப்பட்ட கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி மற்றும் கட்டிடம், நன்கொடைகளின் கிரயம் நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்படாமையினால் வைப்புப் பதிவேட்டில் ஆரம்ப மீதியின் விபரங்களுடன் முன்கொண்டுவரப்படாமையினால் வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டில் அனுமதிப்பத்திர இலக்கம், வருடாந்த கட்டணம், மிகைக் கட்டணம் மற்றும் மொத்தம் என்ற நிரல் பூரணப்படுத்தப்படாமையால் பொதுப்பேரடு உரிய பிரகாரம் பேணப்படாமையின் காரணமாக பதிவேட்டினை பராமரித்துச் செல்லல் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் முகாமைத்துவச் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் ஒரு குறிப்பிடப்பட்ட காலமாகச் செலுத்தப்படாமையினால் ரூபா 120,303 தொகையான தண்ட வட்டியைச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 1,950,000 கடன் தொகை பெறப்பட்டிருந்ததுடன் அந்தக் கடன் பணத்திற்குரிய வட்டி மற்றும் தவணைப்பணம் 2006 இன் இரண்டாம் காலாண்டு முதல் செலுத்தப்படாமையினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடனின் அளவு ரூபா 1,164,785 தொகை மற்றும் நிலுவைக் கடன் வட்டி ரூபா 398,113 ஆக ரூபா 1,562,898 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

(இ) காலாண்டு ரீதியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முத்திரைக் கட்டணம் அனுப்ப வேண்டியிருந்த போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 35,152 மற்றும் ரூபா 69,674 தொகையான முத்திரைக்கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஏக்கர் வரி அறவிடல்
(ஆ) வருமானக் கடன்பட்டோர்
(இ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல்